[28th January 1956

SRI S. RAMALINGAM : இந்தப் கஷ்டங்களையெல்லாம் போக்குவதற்கு பிரதேச மொழியை அரசாங்க மொழியாக்குவற்கு சீக்கிரமாக நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைத்தான் நானும் சொன்னேன். இதைப்பற்றி ஆலோசனை நடந்துவருகிறது. இன்னும் ராஜ்யங்களை எப்படி புணரமைப்பு செய்யவேண்டும் என்பதைப்பற்றியும் இப்போது ஆலோசனை நடந்துவருகிறது. இவையெல்லாம் முடிந்தவுடன் இதில் திர்ந்த முடிவு செய்யவேண்டும்.

SRI K. R. VISWANATHAN : Sir, will the Government at least exempt Backward Classes and Scheduled Castes from obtaining this minimum 40 per cent in English?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, once a person is selected for Government service—whether he belongs to the Backward Classes or Scheduled Castes or to the forward community—he is bound to discharge his duties efficiently. Therefore, that will be the ideal which we will have to bear in mind. We are prepared to consider the claims of the Backward Classes and Scheduled Castes subject to this condition.

SRI M. PALANIYANDI : இப்போதுள்ள படிப்பு முறை திரிசங்கு சுவர்க்க முறையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது வாஸ்தவம்தான். அந்த நிலைமையை நாம் ஏற்படுத்தவில்லை. ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை அப்படி இருக்கிறது. இருந்தாலும்கூட நண்பர் ஸ்ரீ விஸ்வநாதன் கூறியதுபோல பிற்பட்ட மக்களின் பெற்றோர்களும், ஹரிஜனங்களின் பெற்றோர்களும் ஆங்கிலம் படித்து இருக்கமுடியாது என்ற காரணத்தாலே தமிழ் எந்த எந்த ஜில்லாக்களில் அரசாங்க பாஷையாக இருக்கிறதோ அங்கெல்லாம் இவர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது நிலைமை மிகவும் கஷ்டமாக இருப்பதாலே இந்தப் பிரச்னையை சீக்கிரம் தீர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Cases of sucicide in Ponnani taluk

* 3059 *Q.*—SRI E. T. KUNHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of cases of suicide in Ponnani taluk during the year 1954–55 ;

(*b*) whether the Government have made any enquiry into the causes for these suicides ; and

(*c*) if so, the results of such enquiry?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 50.

(*b*) Yes, Sir.

(*c*) All cases have been investigated and treated as suicides as no foul play was suspected in any of these cases.

State Health Insurance Scheme.

* 3060 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether the State Health Insurance Scheme is applicable to the Government Transport Workers and the Government Press Workers?

28th January 1956]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir, excepting the workers belonging to the running staff.

SRI N. K. PALANISAMY : கவர்மெண்ட்டு டிரான்ஸ்போர்ட்டிலுள்ள எல்லா ஸ்டாப்களுக்கும் என்.ஜி.ஒ.க்களுக்குக் கொடுக்கும் சலுகையைப் போலவே வைத்திய வசதியைக் கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ? 10 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்குத் தனியாக ஒரு கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

SRI N. K. PALANISAMY : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். கனம் மந்திரி அவர்கள் எந்தக் கேள்வியைக் கேட்டாலும் தனிக் கேள்வியைப் போட்டால் பதில் அளிப்பதாகக் கூறுகிறார்கள். இப்பொழுது நான் கேட்ட கேள்விக்கு என் இந்தக் கேள்வியின் கீழேயே பதில் அளிக்கக் கூடாதென்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினரின் பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு அர்த்தமில்லை. பாயிண்ட் ஆப் ஆர்டர் நான் தான் எழுப்பியிருக்கவேண்டும். நான் உண்மையைச் சொன்னாலும் அதைத் தவறுதலாகப் புரிந்துகொண்டால் அதற்கு பொறுப்பாளி நான் அல்ல. என்னிடம் இருக்கும் தகவல்களை வைத்துக்கொண்டுதான் நான் பதில் கொடுக்க முடியும். எந்தக் கேள்விக்காவது பதில் அளிக்கத் தகவல் இல்லையென்றால் தான் வேறு கேள்வி போட்டால் பதில் தருவித்துக் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறேன். ஆகவே எல்லா கேள்விக்கும் திடீரென்று என்றால் பதில் சொல்ல முடியாது.

Madras Loan, 1967

*3061 *Q.*—SRI S. RAMALINGAM (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) The total amount subscribed to the Madras Loan, 1967 ;

(*b*) the amounts subscribed within the State and outside it ; and

(*c*) the amounts subscribed by the Banks taking the bonds on pledge.

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) According to the figures now available the total subscription for the 4 per cent Madras Loan, 1967, amounted to Rs. 10½ crores roundly as under—

		LAKHS. (Nominal value) RS.
Subscriptions received within the State	..	10,24
Subscriptions received outside the State	..	23
		10,47
		or 10½ crores.

(*c*) The information is not available with the Government.